பொது சுற்று நிருப இல. 01-36/2015 எனது இல:
FHB/INBU

சுகாதார அமைச்சு

" சுவசிரிபாய"

கொழும்பு 10

10 October, 2010

சகல பிரதி பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு

சகல பணிப்பாளர்கள், சுகாதார அமைச்சு

சகல மாகாண/ பிராந்திய பணிப்பாளர்கள், சுகாதார சேவைகள்

பணிப்பாளர்கள் போதனா/மாகாண பொது வைத்தியசாலைகள்

நிறுவனத்தலைவர்கள்

**இலங்கையிலுள்ள நிபுணர்களுடன் கூடிய வைத்தியசாலைகளிற்கான சிசு பராமரிப்பு தரங்கள்**

சிசு பராமரிப்பு சேவைகள் இலங்கையில் கடந்த பத்தாண்டு காலமாக முன்னேற்றமடைந்துள்ளது. பல வைத்தியசாலைகள் புதிதாக பிறந்த சிசுக்களிற்கான விசேட மற்றும் தீவிர பராமரிப்பினை வழங்குவதற்கான வசதிகளை நிறுவியுள்ளது. புதிதாக பிறந்த சிசுக்களிற்கு தேவை ஏற்படும் நிலையில் சத்திர சிகிச்சை வசதிகளை வழங்குதல் என்பனவும் பல ஆண்டுகளிற்கு மேலாக முன்னேற்றமடைந்துள்ளது.

அதிக ஆபத்திற்குரிய சிசுக்களான குறை மாதத்தில் பிறக்கும் சிசுக்கள் அல்லது ஆபத்தான மருத்துவ அல்லது சத்திர சிகிச்சைக்குரிய சூழ்நிலைகளுடனான சிசுக்கள் போன்றவற்றிற்காக கிடைக்கக்கூடிய சிசு பராமரிப்பு, நல்ல முடிவுகளை ஏற்படுத்தியுள்ளது. பிராந்தியப்படுத்தப்பட்ட பிறப்புக்கால பராமரிப்பு தொடர்பான கோட்பாடு "*கர்ப்பத்தின் விளைவினை மேம்படுத்தல் : தொண்ணூறாம் ஆண்டு காலத்திலும் அதற்கு அப்பாலும்*" என்ற தலைப்பில் 1976 ஆம் ஆண்டின் பங்குனி மாதத்தின் Dimes அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் படிநிலைகளாக ஒழுங்குபடுத்தப்பட்ட தாய், சேய் பராமரிப்பு 3 தரங்களில் உள்ளடங்கப்பட்டிருப்பதுடன், கூடிய ஆபத்திற்குரிய நோயாளிகள் விசேட ஆளணி மற்றும் வளங்களுள்ள மத்திய நிலையங்களுக்கு ஆபத்தின் தரம் மற்றும் நோயின் உக்கிரம் என்பவற்றினடிப்படையில் சிகிச்சைக்காக பரிந்துரை செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பல நிபுணர்களுடன் கூடிய வைத்திய சாலைகளில் சிசு வைத்தியத்துறையில் பணிபுரியும் சிசு வைத்திய அல்லது குழந்தை வைத்திய நிபுணர்கள் உடன் பிறந்த சிசுக்களிற்கு சிறந்த மற்றும் தீவிர பராமரிப்பு வசதிகளை விஸ்தரித்துள்ளார்கள். சான்று எடுத்துரைப்பது யாதெனில் தீவிர நோயுள்ள சிசுக்களிற்கான சிசு பராமரிப்பினை மத்தியமயப்படுத்தப்பட்ட நிலையில் வழங்குவது சிறந்தது. ஏனெனில் இது புதிதாக பிறந்த சிசுக்களிற்கு சிறந்த விளைவுகளை ஏற்படுத்துவதற்கு இட்டுச்செல்லும். சிசுக்கள் பராமரிப்பு அலகினால் சிகிச்சையளிக்கப்பட்ட தீவிர நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதனுடைய விளைவு முன்னேற்றமடைவதாக காட்டப்பட்டுள்ளது. அத்துடன் தீவிர நோயினால் பாதிக்கப்பட்டுள்ள புதிதாக பிறந்த

சிசுக்களிற்கு பராமரிப்பினை வழங்குவதற்கு அதிநவீன வசதிகள் தேவைப்படுவதுடன், அப்படிப்பட்ட சேவைகளை மத்தியமயப்படுத்தல் கூடியளவு செலவு பயனுறுதியுடையதாக காட்டப்பட்டிருக்கின்றது.

இச்சமயம்முதல், சிசு பராமரிப்பு சேவைகளை மேலும் முன்னேற்றுவதற்கு, நிபுணர்களுடன் கூடிய வைத்திய சாலைகளில் சிசு பராமரிப்பு சேவைகளின் தரங்கள் வரையறுக்கப்படுவதுடன் பெரியளவிலான அலகாக கூடியளவில் நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு பராமரிப்புகளை வழங்குவதற்கும் மற்றும் வெளியிலிருந்து இடமாற்றப்படும் குழந்தைகளை கவனிப்பதற்குமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள நிபுணர்களுடன் கூடிய வைத்தியசாலைகளில் சிசுக்கள் பராமரிப்பு நான்கு தரங்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அலகொன்றில் இருக்க வேண்டிய மிகக்குறைந்தளவு தகைமைகள் இச்சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிடப்பட்டது

டாக்டர் P.G மகிபால

பணிப்பாளர் நாயகம் சுகாதார சேவைகள்

நகல்:

செயலாளர், சுகாதார அமைச்சு

மேலதிக செயலாளர், மருத்துவ சேவைகள்

பிரதான கணக்காளர், சுகாதார அமைச்சு

தலைவர், இலங்கை குழந்தை வைத்திய நிபுணர்கள் கல்லூரி.

தலைவர், இலங்கை பெண் நோயியல் மற்றும் குழந்தை பிறப்பு வைத்திய நிபுணர்கள் கல்லூரி

தலைவர், குழந்தை பிறப்பு சார்ந்த சபை, இலங்கை.

## இலங்கையிலுள்ள நிபுணர்களுடன் கூடிய வைத்தியசாலைகளிற்கான சிசு பராமரிப்பு தரங்கள்

நிபுணர்களுடன் கூடிய வைத்தியசாலைகளிற்கான சிசு பராமரிப்பு தரங்களும் ஒவ்வொரு தரங்களில் இருக்கவேண்டிய மிகக்குறைந்த தகைமைகளும்

1. **தரம் III+ தகைமைகள்**

- இருதய சத்திர சிகிச்சை (Cardiac surgery)
- சிசுக்களிற்கான நரம்பியல் சத்திர சிகிச்சை (Neonatal neuro surgery)
- ECMO
- தலை வெப்பநிலையை குறைத்தல் (Head Cooling)
- மிகவும் குறைந்த உடல் நிறை (Extremely low BW<1000g)
- தரம் III வசதிகள் (And Level III Facilities)
- தாய் சேய் நிலையம் மற்றும் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் மையம் (And a MBC and LMC)

2. **தரம் III தகைமைகள்**

- சிசுக்களிற்கான சத்திர சிகிச்சை (தெரிவு செய்த அலகுகளில்) (Neonatal surgery) ( in selected units)
- தொடர்ச்சியான நேரமுக்க சுவாசக்குழாய் அமுக்கம், தொடர்ச்சியற்ற நேரமுக்க செயற்கை சுவாசம், உயர் தடவைகள் + நைதரசன் ஒட்சைட் வரைக்குமான செயற்கை சுவாசம் (Ventilation up to CPAP, IPPV, high frequency + NO)
- குருதி மாற்றீடு சிகிச்சை (Exchange transfusion)
- வெப்பநிலையை குறைத்தல் (தெரிவு செய்த மையங்களில் மட்டும்) Cooling (selected centers only)
- உடல் நிறை < 1250g + > 1250g சிக்கல்களுடன்) (BW<1250g + > 1250 g with complications
- குருதி முலம் வழங்கப்படும் முற்றான போஷணை (TPN)
- தரம் II வசதிகள் (And Level II Facilities)
- தரம் I வசதிகள் (And Level I Facilities)
- தாய் சேய் நிலையம் மற்றும் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் மையம் (And a MBC and LMC)

3. **தரம் II தகைமைகள்**

- குறுகிய கால செயற்கை சுவாசம் + தொடர்ச்சியான நேரமுக்க சுவாசக்குழாய் அமுக்கம் ( Short term ventilation + CPAP)
- வேறு விசேட பராமரிப்பு சிசுக்கள் பிரிவு வசதிகள் (Other SCBU facilities)

- தரம் 3 மற்றும் தரம் 4 இலிருந்து மீள இடமாற்றப்பட்ட சிசுக்களிற்கான தொடர் பராமரிப்பு (Continuation of care of transferred back babies from level 3 & 4)
- செறிவான ஒளிக்கதிர் சிகிச்சை (Intensive photo therapy)
- உடல் நிறை > 1250g சிக்கல்களற்ற
- தரம் I வசதிகள் (And Level I Facilities)
- தாய் சேய் நிலையம் மற்றும் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் மையம் (And a MBC and LMC)

**4. தரம் I தகைமைகள்**

- பாலூட்டல் தொடர்பான சிக்கல்கள் (Feeding problems)
- மூக்கில் செருகும் ஒட்சிசன் ( Nasal prong $O_2$ )
- ஒளிக்கதிர் சிகிச்சை – தனியான (Photo therapy – single)
- வளர்ச்சி முற்றற்ற சிசுவினை காக்கும் பெட்டி/வெப்ப சீர் பெட்டி (Incubator care / thermal)
- நாளம் முலம் வழுங்கப்படும் திரவம் (IV Fluids)
- ஊசி முலம் வழுங்கப்படும் நுண்ணுயிர்கொல்லி (IV antibiotics)
- குறைந்தளவு உடல் குளுக்கோஸ் நிலைக்கு சிகிச்சை செய்தல் ( Management of hypoglycemia)
- வெப்ப பராமரிப்பு (Thermal Care)
- உடல் நிலையை சீர்செய்தலும் இடமாற்றலும் ( Stabilization and Transport)
- தாய் சேய் நிலையம் மற்றும் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் மையம் (And a MBC and LMC)

** குழந்தை பிறப்பதற்கு முன்னராகவே (கருப்பையிலிருக்கும் போது) தரம் III நிலையங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். பிள்ளை பிறந்தவுடன் சிக்கல்கள் எதுவும் இல்லாவிடின் மீளவும் தரம் II அல்லது தரம் I நிலையங்களுக்கு அனுப்பவும்.

**வைத்தியசாலைகளும் அவற்றில் உள்ள பராமரிப்பு தரங்கள் அடங்கிய பட்டியலும் பின்வருமாறு**

| வைத்தியசாலையின் பெயர் | அடையாளப்படுத்திய பராமரிப்பு |
|---|---|
| மேல் மாகாணம் | |
| LRH | III+ |
| CNTH | III |
| CSTH | III |
| SJGH | III |
| DMH | III |
| CSHW | III |
| DGH கழுத்துறை | III |
| DGH கம்பஹா | II |
| DGH நீர்கொழும்பு | II |
| BHA பாணந்துறை | II |
| BHA அவிசாவளை | II |
| BHA ஹோமாகம | II |
| BHA வத்துபிற்றிவெல | II |
| BHA ஹொரண | II |
| BHB முல்லேரியாவ | I |
| | |
| தெற்கு மாகாணம் | |
| TH கராப்பிட்டிய | III+ |
| TH மஹமோதர | III |
| DGH மாத்தற | II |
| DGH ஹம்பான்தோட்ட | III |
| BHA பாலபிடட்டிய | II |
| BHA தங்காலை | II |
| BHA எல்பிட்டிய | II |
| BHB கம்புறுபிட்டிய | I |
| BHB திஸ்ஸமஹாராம | I |
| BHB தெனியாய | I |
| BHB வலஸ்முல்ல | I |
| BHB உடுகம | I |
| | |
| சப்ரகமுவ மாகாணம் | |
| PGH இரத்தினபுரி | III |
| DGH கேகாலை | II |
| BHA எம்பிலிப்பிட்டிய | II |
| BHB மாவனல்ல | I |
| BHB பலாங்கொடை | I |
| BHB கஹவத்த | I |
| BHB கரவனல்ல | I |

| | |
|---|---|
| BHB வராக்கபொல | I |
| BHB கலவன்ன | I |
| | |
| வடமேல் மாகாணம் | |
| PGH குருநாகல் | III |
| DGH சிலாபம் | II |
| BHB வாழைச்சேனை | I |
| BHB மஹாஓயா | I |
| | |
| வட மாகாணம் | |
| TH யாழ்ப்பாணம் | III+ |
| DGH வவுனியா | II |
| DGH கிளிநொச்சி | II |
| DGH மன்னார் | II |
| DGH முல்லைத்தீவு | II |
| BHA பருத்தித்துறை | I |
| BHA தெல்லிப்பளை | I |
| BHB ஊர்காவற்றுறை | I |
| BHB செட்டிக்குளம் | I |
| BHB சாவகச்சேரி | I |
| | |